# Tamil Murli Quiz 26-11-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:
**உண்மையான அலௌகிக மந்திரவாதிகளாகிய நீங்கள் எந்த மந்திர ஜாலத்தை காட்ட வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

A. பதீத உலகை பாவனமாக மாற்றக்கூடிய மந்திர ஜாலத்தை
B. தமோபிரதான 5 தத்துவங்களை சதோபிரதானமாக ஆக்கக்கூடிய மந்திர ஜாலத்தை
C. மனிதர்களை தேவதைகளாக ஆக்கக்கூடிய மந்திர ஜாலத்தை
D. துக்கம் நிறைந்த பழைய உலகை சுகம் நிறைந்த சொர்க்கமாக மாற்றும் மந்திர ஜாலத்தை

**Q.2)** சரியான **2 (இரண்டு)** விடை**களைத்** தேர்வு செய்யவும்:
**நல்ல முயற்சியாளர்களாக இருக்கும் மாணவர்களின் அடையாளங்கள் என்ன?**

A. அவர்கள் சதா பாபாவின் சேவையில் ஈடுபட்டிருப்பார்கள்.
B. மதிப்புடன் தேர்ச்சி அடையக்கூடிய லட்சியம் வைப்பார்கள்
C. அவர்களின் புத்தியில் ஒரு தந்தையின் நினைவு தான் இருக்கும்
D. அவர்களின் புத்தியில் சேவையில் முன்னேற்றம் எப்படிக் கொண்டு வருவது என்பது மட்டும் தான் இருக்கும்.

**Q.3)** சரியான விடையை தேர்வு செய்யவும்:
**நீங்கள் வகுப்பில் அமரும் போது முதன் முதலில் விழிப்புணர்வு ஊட்ட வேண்டிய உங்கள் வேலை எது என்று பாபா கூறுகிறார்?**

A. சகோதர , சகோதரிகளே தங்களை ஆத்மா என்று புரிந்து கொண்டு அமருங்கள்
B. சகோதர, சகோதரிகளே உங்கள் வீடு, வாசல், குழந்தைகள், தொழில் ஆகிய அனைவற்றையும் புத்தியின் மூலம் மறந்து விட்டு அமருங்கள்.
C. அனைத்து சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் மறந்து விட்டு ஒரு தந்தையின் நினைவில் அமருங்கள்
D. நாம் லட்சுமி-நாராயணர் போல் தேவதைகளாக ஆவதற்காக இந்த படிப்பை படிக்க இங்கே வந்து அமர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற நினைவில் அமருங்கள்.

**Q.4)** சரியா? தவறா?:
**பக்தி மார்க்கத்தின் கதைகள், சாஸ்திரம் முதலியவைகளை கேட்பது- இதனை படிப்பு என்று சொல்வதில்லை. இதில் வருமானம் ஏதும் இல்லை. வெறும் செலவு தான் ஆகிறது.**

A. சரி
B. தவறு

**Q.5)** சரியான விடையை தேர்வு செய்யவும்:
**முதல் நம்பர் முள்-காமக் கோடாரி. காமத்தை கோடாரி என்று சொல்கிறோம். கோபத்தை ________________________ என்போம்.**

A. அக்னி
B. விகாரம்
C. வாள்
D. பூதம்

**Q.6)** சரியான விடையை தேர்வு செய்யவும்:
**தனது சக்தி வாய்ந்த நிலையின் மூலம் அனைவரின் சுப விருப்பங்களை நிறைவேற்றக் கூடிய ______________________ ஆகுக.**

A. உண்மையான வள்ளல்
B. உண்மையான சேவாதாரி
C. மகாதானி
D. விஷ்வ கல்யாணகாரி

*Q.7)* **<u>சரியா? தவறா? :</u>**
**சாஸ்திரங்களில் அனுமார் வாயு புத்திரன். வாயுவிலிருந்து வெளிப்பட்டார் என்று எழுதி வைத்துள்ளதை உண்மை என்கின்றனர். மேலும் மற்றவர்களுக்கும் இப்படிப்பட்ட விஷயங்களை சொல்லிக்கொண்டும் இருக்கின்றனர். மக்கள் அனைவற்றையும் உண்மை என்று நம்புகின்றனர். இது சரியா?**

A. சரி
B. தவறு

*Q.8)* **<u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>**
**எப்பொழுதும் மரியாதைகளுக்குட்பட்டு நடந்த படி இருந்தீர்கள் என்றால் ___________________ ஆகி விடுவீர்கள்.**

A. மரியாதைகளுக்கு அதிகாரிகள்
B. மரியாதா புருஷோத்தமர்
C. தந்தைக்கு பிடித்தமானவர்கள்
D. அனைவரும் விரும்புபவர்கள்

*Q.9)* **<u>பொருத்துக:</u>**

| | Choice | | Match |
|---|---|---|---|
| A | ஆன்மீகக் குழந்தைகள் | 1 | தூய்மை அடைவதற்கான வழி |
| B | மந்திரவாதி தந்தை | 2 | வருமானத்திற்கான வழி |
| C | படிப்பு | 3 | சரியான நல்ல கர்மத்தையே செய்ய வேண்டும் என்பதற்காக |
| D | தத்தையை நினைவு செய்வது | 4 | ஆத்மா பேசுவதற்கு தேவை |
| E | சரீரம் | 5 | மனிதர்களை தேவதைகளாக மாற்றுபவர் |
| F | உங்களுக்கு ஞானக் கண் கிடைத்துள்ளது | 6 | மந்திரவாதிகளாகி மந்திர ஜாலம் செய்பவர்கள் |

*Q.10)* **சரியா தவறா என்று குறிக்கவும் :**
**கிருஷ்ணருக்கு சக்கரத்தை காட்டுகின்றனர். அசுர கணங்களை கொன்றபடி இருக்கிறார் எனக் காட்டுகின்றனர். இப்படிப்பட்ட விஷயம் நடந்தது என்று கூறுவது சரியா?**

A. சரி
B. தவறு